# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்


எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 140/ந/2017

ஆணை எண். 211/2017

நாள் : 23/08/2017

திருமதி. இராஜலட்சுமி,
கோயம்புத்தூர் – 641 027. – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
மேட்டூர் நகராட்சி,
மேட்டூர். – எதிர் மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், இரத்னபுரி, சாஸ்திரி சாலை, 49/23 முகம்மது அலித் தெரு முகவரியில் வசிக்கும் திருமதி S. ராஜலட்சுமி அவர்களின் 26.06.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.06.2017 அன்று பெறப்பட்டு 140/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு சம்பந்தமாக, மேட்டூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், இரத்னபுரி, சாஸ்திரி சாலை, 49/23 முகம்மது அலித் தெரு முகவரியில் வசிக்கும் திருமதி S. ராஜலட்சுமி என்பவர், தான் மேட்டூர் நகராட்சியில் உதவியாளராகப் பணியாற்றி, பணி மூப்பின் காரணமாக 31.07.1999 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றதாகவும், 18 ஆண்டுகள் கடந்த நிலையிலும் தனது சேமநலநிதிக்கான வட்டித் தொகை வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக மேட்டூர் நகராட்சி ஆணையர் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். முறையீட்டு மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேமநலநிதி வட்டித் தொகை ரூ. 25,168/– (ரூபாய் இருபத்தைந்தாயிரத்து, நூற்று அறுபத்து எட்டு மட்டும்) 01.08.2017 நாளிட்ட காசோலை எண்.239306 மூலம் வழங்கப்பட்டு விட்டது என நகராட்சி ஆணையர் தனது 18.06.2017 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரர் ஒய்வு பெற்று 18 ஆண்டுகள் கடந்த பின்பே, அவரது சேமநலநிதிக்கான வட்டித்தொகை வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட வட்டித்தொகையும் சரியாகக் கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டிருக்கும் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. முறையீட்டு மனுதாரர் ஒய்வு பெற்ற நகராட்சி அலுவலர். தான் பணிபுரிந்த அலுவலகத்திலிருந்து சேமநல வட்டித்தொகையினைப் பெறுவதற்கு சுமார் 18 ஆண்டுகள் காத்திருக்கவேண்டிய அவலநிலை முறையீட்டு மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும், 13–வது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி ஏற்படுத்தப் பட்ட இம்முறைமன்ற நடுவத்தை அணுகினால் மட்டுமே உள்ளாட்சி அமைப்புகளில் தங்களது நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வு காண இயலும் என்ற எண்ணம் பொதுமக்களுக்கு ஏற்படா வண்ணம், ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பின் செயல்பாடும் அமையவேண்டும் என்பதே இம்முறைமன்ற நடுவத்தின் கருத்தாக உள்ளது. எனவே, இதுபோன்ற நேர்வுகளில் தேவையற்ற காலதாமதத்தை தவிர்த்து விரைவான நடவடிக்கைகளை மனிதாபிமானத்தோடு எதிர்காலத்தில் எடுத்திட அறிவுறுத்தி ஆணையிடப்படுறது.

2017– ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 23–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திருமதி. இராஜலட்சுமி,
எண்.49/23, முகம்மது அலி தெரு,
சாஸ்திரி சாலை, ரத்னபுரி,
கோயம்புத்தூர் 641 027

2. நகராட்சி ஆணையர்,
மேட்டூர் நகராட்சி,
மேட்டூர்

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்